


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான காவல்துறை மற்றும் ஊரக வளர்ச்சிதுறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (06.08.2016) நடைபெற்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 501/2016 நாள்: 06.08.2016

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ஊரக மற்றும் நகர்ப்புறம்) 2016-ல் நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக ஒருங்கிணைப்புக் கூட்டம் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் வைத்து 06.08.2016 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்ஸி லீமா அமலினி, நாகர்கோவில் நகர துணை காவல் கண்காணிப்பாளர் திரு. ற்றி. ஈஸ்வரன், தீயணைப்பு துறை நிலைய அலுவலர், திரு. எஸ். சத்திய குமார் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு. சா. பத்ஹூ முகம்மது நசீர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு. அ. முகமது உமர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. ஆர். முத்துகுமார் மற்றும் அனைத்து நகராட்சி ஆணையாளர்களும் ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் நிலை அலுவலர்களும் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 2016 உள்ளாட்சி தேர்தலுக்கு உள்ளாட்சி அமைப்புகளால் தேர்வு செய்யப்பட்டுள்ள வாக்குச் சாவடிகள் பட்டியலின் அடிப்படையில் பதட்டமான வாக்குச் சாவடிகளை, மிகவும் பதட்டமான வாக்குச் சாவடிகள் கண்டறிந்து அந்த வாக்குச் சாவடிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க காவல் துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள், வாக்குப் பெட்டிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள், வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் அச்சகங்கள், தேர்தலுக்கு முன் தினம் வாக்குப் பதிவு பொருட்கள் மண்டல அலுவலர்களுடன் அனுப்பி வைக்கும் பொழுது பாதுகாப்பு, வாக்குப் பதிவு நடைபெறும் நாளில் வாக்குச் சாவடிகளுக்கு பாதுகாப்பு மற்றும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு பாதுகாப்பு வழங்கிட அறிவுரை வழங்கப் பெற்றது.

மேற்காணும் பாதுகாப்பு பணிகளுக்கு மாவட்ட காவல் துறை அலுவலர்கள் தவிர்த்து தேவைப்படும் பட்சத்தில் அருகில் இருக்கும் மாநிலங்களில் இருந்து காவல் துறை அலுவலர்களை பெற்றிட நடவடிக்கை எழுத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் தேவையற்ற நிகழ்வுகள் நிகழாமல் பாதுகாத்திட தேவைப்படும் பட்சத்தில் மத்திய பாதுகாப்பு படைகளையும் (CRPF) பெற்றிட நடவடிக்கை எடுத்திடவும் அறிவுரை வழங்கப்பட்டது.

வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கும் அச்சகங்கள், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு தீ பாதுகாப்பு வழங்கிட நடவடிக்கை எடுத்திட தீயணைப்பு துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

2016 உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்குச் சாவடிகளில் அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி , கழிப்பறை வசதி, மின் வசதிகள், கட்டிடங்களின் உறுதி தன்மை, மழை நீர் வடிகால்கள், சாய்வு தளங்கள், கதவுகள், ஜன்னல்கள் சரிசெய்தல் ஆகியவற்றை உறுதி செய்து உயர்ந்த நிலையில் பராமரித்து தேர்தலுக்கு தயார் நிலையில் வைத்திட அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு (அனைத்து நகராட்சி ஆணையாளர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), நாகர்கோவில் மற்றும் அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்) தயார் நிலையில் வைத்திட அறிவுரை வழங்கப்பட்டது.

2011 சாதாரண உள்ளாட்சி தேர்தலில் பொழுது ஏற்பட்ட நிகழ்வுகளை சுட்டி காட்டி 2016 நடைபெறும் தேர்தலின் பொழுது அவ்வாறு நிகழா வண்ணம் நடவடிக்கை எடுத்திட அனைத்து தேர்தல் நடத்து அலுவலர்களுக்கும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அறிவுரை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.